# கண்ணீர் வணக்கம்



தோற்றம்
20-12-1936



மறைவு
05-02-2016



## திரு. சங்கரப்பிள்ளை சோமசேகரம்பிள்ளை (சித்தப்பா)

காரைநகர் மாப்பாணவூரியை பிறப்பிடமாகவும் திருநகர் கிளிநொச்சியை வசிப்பிடமகவும் கொண்டவரும்
நீலிப்பந்தனை துர்க்கை அம்மன் கோயிலின் தர்மகர்த்தாவுமாகிய திரு.சங்கரப்பிள்ளை
சோமசேகரம்பிள்ளை அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நீலிப்பந்தனையைச் சேர்ந்த மக்கள் அதிர்ச்சியும்
ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளனர். நீலிப்பந்தனையையும் அதனை அண்டிய குறிச்சிகளையும் சேர்ந்த மக்களின்
சமய பண்பாட்டு பாரம்பரியங்களையும் சமய ஒழுக்கங்களையும் மேம்படுத்துவதில் 1975இலும் அதன்
பின்னரான காலப் பகுதியிலும் முனைப்புடன் செயற்பட்ட நீலிப்பந்தனை இந்து இளைஞர் மன்றத்தினால்
முன்னெடுக்கப்பட்டுவந்த செயற்பாடுகள் வகித்த பங்கு காத்திரமானதாகும்.
சிறப்பாக ஆலயத்தைச் சார்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்த பணிகளில் ஆலய தர்மகர்த்தாவாகிய
திரு. சோமசேகரம்பிள்ளை அவர்கள் வழங்கியிருந்த ஆதரவும் ஒத்துழைப்பும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன்
நினைவுகூரத்தக்கதாகும். இம்மன்றத்தால் 1980ல் முன்னெடுக்கப்பட்டிருந்த பெரிய பயனுள்ள திட்டமாகக்
கருதப்படும் ஆலயத்திற்கும் அதனைச் சூழவுள்ள குறிச்சிகளிலுள்ள வதிவிடங்களிற்கும் மின்னிணைப்பினை
ஏற்படுத்தும் திட்டத்திற்கு திரு. சோமசேகரம்பிள்ளை அவர்கள் வழங்கிய ஊக்கிவிப்பும் ஒத்துழைப்பும்
இதனை வெற்றிகரமாக நிறைவுசெய்ய வழிகோலியது என்பது வரலாற்றுப் பதிவாகும்.
திரு.சோமசேகரம்பிள்ளை அவர்கள் ஆலயத்தின் வளர்ச்சியில் இறுதி மூச்சுவரை கண்ணும் கருத்துமாக இருந்து
வந்துள்ளார். காரைநகரின் இடப்பெயர்வு ஏற்பட்ட காலகட்டத்தில் இவ்வாலயத்தின் நித்திய பூசை தடங்கலின்றி
நடைபெற வழிவகுத்ததுடன் மட்டுமல்லாது அதன் அனைத்துக் கருமங்களும் சிறப்பாக நடைபெற
செயலாற்றிவந்ததுடன் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டுவந்த திருப்பணிகள்இ கும்பாபிஷேகங்கள் என்பவற்றினை
நிறைவு செய்ய பயபக்தியுடன் உழைத்தவர். திரு.சோமசேகரம்பிள்ளை
அவர்களின் மறைவு அன்னாரது குடும்பத்திற்கு மட்டுமல்லாது இப்பகுதி மக்களிற்கும் பேரிழப்பாகும்.
அன்னாரின் இழப்பினால் ஆறாத் துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
நீலிப்பந்தனை துர்க்கை அம்பாளின் அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

### முன்னாள் நீலிப்பந்தனை இந்து இளைஞர் மன்ற நிர்வாக உறுப்பினர்கள்

**வி. குமரேஸ்வரதாசன் (முன்னாள் தலைவர்) - பெரிய பிரித்தானியா**
**க. தர்மராசா (முன்னாள் உப-தலைவர்) நியூயோர்க், அமெரிக்கா**
**கனக. சிவகுமாரன் (முன்னாள் செயலாளர்) - ஸ்காபுரோ, கனடா.**
**க. ஸ்ரீகரன் (முன்னாள் பொருளாளர்) நீலிப்பந்தனை, காரைநகர்.**